தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 10-9-2013
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## சின்ன வெங்காயத்தை இருப்பு வைத்து விற்கவும்

இந்தியாவில் இரண்டு முக்கிய வெங்காய வகைகள் உள்ளன. அவை பெல்லாரி மற்றும் சின்ன வெங்காயம் ஆகும். இந்தியாவின் மொத்த வெங்காய பரப்பில் தமிழ்நாடு 5 சதவீதம் பங்களிக்கிறது. இதில் 70 சதவீதப் பரப்பிற்கு மேல் சின்ன வெங்காயம் ஆகும். தேசிய தோட்டக்கலை வாரியத்தின் இரண்டாவது முன்கூட்டிய கணக்கீட்டின் படி 2012-13ம் ஆண்டில் தமிழ்நாட்டில் வெங்காயத்தின் பரப்பு மற்றும் உற்பத்தி முறையே, 36,310 எக்டர் மற்றும் 3,98,930 டன்கள் ஆகும். இது 2011-12ம் ஆண்டில் 37,120 எக்டர் மற்றும் 5,56,450 டன்களாக இருந்தது.

சமீபக் காலத்தில் வெங்காயத்தில் ஏற்பட்ட விலை ஏற்றத்தாழ்வுகளை பரிசீலிக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் உள்ள உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் கடந்த 15 வருட திண்டுக்கல் சந்தை விலைகளை ஆராய்ந்து உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களிடையே சந்தை ஆய்வுகளையும் நடத்தியது.

வர்த்தகத் தகவலின்படி, தமிழ்நாட்டில் பொதுவாக மூன்று பருவங்களில் பயிரிடப்படும் சின்ன வெங்காயமானது இருப்பு வைப்பதன் மூலம் ஆண்டு முழுவதும் சந்தையில் கிடைக்கிறது. மேலும் பயிர்க்காலம், குறைந்த சாகுபடிச் செலவு, சேமிப்புத்திறன் மற்றும் சிறப்பான வருவாய் ஆகியவற்றை சின்ன வெங்காயத்தைத் தொடர்ந்து பயிரிடுவதற்கான காரணங்களாக விவசாயிகள் கருதுகின்றனர். அண்டை மாநிலமான கேரளா வெங்காயத் தேவைக்கு தமிழ்நாடு மற்றும் கர்நாடகா மாநிலங்களையே சார்ந்துள்ளது.

மொத்த சின்ன வெங்காய உற்பத்தியில் 30-35சதம் ஏற்றுமதிக்கு செல்கிறது. இந்தோனேஷியா சின்ன வெங்காயம் இறக்குமதி செய்யும் நாடுகளில் முக்கியமான நாடு ஆகும். தாய்லாந்து சின்ன வெங்காய ஏற்றுமதியில் முக்கியப் போட்டியாளராக உள்ளது. இந்த

வருடம் தாய்லாந்தில் உற்பத்தி நலிவடைந்துள்ளது. அதனால் இந்திய சின்ன வெங்காயத்தின் ஏற்றுமதித் தேவை அதிகரித்துள்ளது.

வரத்துக் குறைவினால் 2013ம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜுன் வரை சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை கிலோவிற்கு ரூபாய் 40 முதல் 50 வரை இருந்தது. கர்நாடகாவிலிருந்து வரத்து ஜுன் மாதம் தொடங்கி தற்போது முடிவடையும் நிலையில் உள்ளது. அதே சமயம் மழையினால் தரம் குறைந்துள்ளது. மைசூர் வெங்காயத்தின் விலை கிலோவிற்கு ரூபாய் 24-30 வரை உள்ளது. தற்போது தேனி, திண்டுக்கல், மதுரை, திருச்சி, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலிருந்து சந்தைக்கு வரத்து வந்து கொண்டிருக்கின்றன. தற்போது தமிழ்நாட்டின் சின்ன வெங்காயத்தின் விலை திண்டுக்கல் சந்தையில் கிலோவிற்கு ரூ.35-43 வரை உள்ளது. ஆகஸ்டு மாத இறுதியில் கோயம்புத்தூர், திருப்பூர், நாமக்கல் மாவட்டங்களிலிருந்து வரத்து வரத் துவங்கும்.

புரட்டாசிப்பட்ட விதைப்பிற்கு விதைத் தேவை உள்ளதால் செப்டம்பர் மத்தியிலிருந்து அக்டோபர் வரை விலை உயர வாய்ப்பு உள்ளது.மேற்கண்ட தகவலின் படி சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை அறுவடை சமயத்தில், செப்டம்பர் மற்றும் அக்டோபர் 2013ல் கிலோவிற்கு ரூ.45க்கு மேல் இருக்க வாய்ப்புகள் உள்ளன. இதனால் விவசாயிகள் அறுவடை செய்த சின்ன வெங்காயத்தை இருப்பு வைத்து அக்டோபர் மாத மத்தியில் விற்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:-**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர்-641 003,
தொலைபேசி -0422-2431405

**தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :-**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர்-641 003
தொலைபேசி எண் - 0422-6611374,
0422-6611283

மக்கள் தொடர்பு அலுவலர்